Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.71/2018

**Depositions of PW- 15**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.மகேஷ்குமார் | Occupation | காவல் ஆய்வாளர் |
| Father's name | ஜெயசீலன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of June 2026.

04.06.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**சாட்சி வீடியோ காணொளி மூலம் ஆஜரானார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.03.2017 அன்று திருவில்லிபுத்தூர் நகர் வட்டக்காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய குற்ற எண்232/2017 பிரிவுகள்.279, 337 இதச ஆக பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையை அதில் பாதிக்கப்பட்ட நபர் இறந்தவுடன் வழக்கு எனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை சென்று இறந்தவர் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை பஞ்சாயத்தார் முன்னிலையில் மேற்கொண்டேன். **பிரேத விசாரணை அறிக்கை அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இறந்தவரின் உடலை பிரேத பரிசோதனை செய்வதற்காக காவலரிடம் கடிதம் கொடுத்து அனுப்பினேன்.

பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 2 முதல் 9 சாட்சிகளை ஏற்கனவே சார்பு ஆய்வாளர் விசாரித்தவர்களை நான் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தகா.தேவதாஸ், சாட்சி சத்தியமூர்த்தி, தகா.ராஜேஷ்கண்ணா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்தேன். பின்னர் 18.04.2017 அன்று மேற்படி விபத்துக்குள்ளான வாகனங்களை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பிவைத்தேன். பின்னர் 06.05.2017 அன்று திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் சுகன்யாதேவி, மதுரை மீனாட்சி மிஷின் மருத்துவமனை மருத்துவர் ஜமால் முகமது சாஜி மற்றும் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை மருத்துவர் காதர் மைதீன், மதுரை மருத்துவக்கல்லூரி மருத்துவர் விஜயபாலாஜி ஆகியோர்களை விசாரித்து மருத்துவ சான்று மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் அன்றைய தினமே மோட்டார் வாகன ஆய்வாளர் கார்த்திகேயன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். **TN 67 N 0409 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.9 ஆகவும், TN 67 AQ 4847 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கின் முதல் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் ரமேஷ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றை தினமே எனது விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள்.279, 304(A) இதசவின் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இவ்வழக்கின் சாட்சிகளை சரிவர புலன் விசாணை மேற்கொள்ளாமல் எதிரி மீது ஒருதலைபட்சமாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.<br><br>நீதித்துறை நடுவர் எண்.2,<br>திருவில்லிப்புத்தூர். |